செ.வெ.எண் :113/2020 நாள் : 05.03.2020

காஞ்சிபுரம் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை சார்பாக மாவட்ட ஆட்சியர் வளாகம் மக்கள் நல்லுறவு கூட்ட அரங்கில் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு முறைகள் பற்றிய ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் இன்று 05.03.2020 நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை சார்பாக அனைத்து துறை அலுவலர்களுடன் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு முறைகளைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விவாதித்தார். இவ்வாய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிப்பதாவது அனைத்து துறையைச் சார்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைந்து பள்ளி, கல்லூரி, மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு முறைகளான கை கழுவும் முறைகள், இருமும் போதும் தும்மும் போதும் வாய் மற்றும் மூக்கை கைக்குட்டை கொண்டு மூடி கொள்ள வேண்டும். மற்றும் சிகிச்சை தரும் அனைத்து மருத்துவமனைகளும் கிருமி நாசினி கொண்டு சுத்தமாகக் துடைத்து பராமரித்தல் வேண்டும் என்றும் சளி இரும்பல் மற்றும் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே அருகில் உள்ள மருத்துவரை அணுக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இவ்வாய்வு கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என் சுந்தரமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.ட்டி. ஸ்ரீதர், காஞ்சிபுரம் சார் ஆட்சியர் திரு.சரவணன் இ.ஆ.ப., இணை இயக்குனர் (மருத்துவ பணிகள்) மரு. ஜீவா, துணை இயக்குனர் (சுகாதாரப்பணிகள்) மரு. பழனி, ஸ்ரீபெரும்புதூர் உதவி காவல் கண்காணிப்பாளர் திரு. கார்த்திகேயன் இ.கா.ப., அவர்கள் பொது சுகாதாரத் துறையை சார்ந்த மருத்துவர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,காஞ்சிபுரம்.